MATHS CENTRE
NELLIADY
A/L 94
(துரித மீட்டல்)
வகுப்பு
✼ PHYSICS ✼
திரு சூரியநாதன்
ஆரம்பம்:
19 — 02 — 1994 சனி
10-30 a. m.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

MATHS CENTRE
NELLIADY
A/L 94
(துரித மீட்டல்)
வகுப்பு
✼ PHYSICS ✼
திரு சூரியநாதன்
ஆரம்பம்:
19 — 02 — 1994 சனி
10-30 a. m.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 07 சனிக்கிழமை (19 — 02 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 84

# முல்லைத்தீவில் கடற்படையின் தாக்குதலில் 3 மீனவர்கள் பலி; 7 பேரைக் காணவில்லை

## சேதமுற்ற 5 படகுகளும் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் பூனைத்தொடுவாய் — கடற்தொடுவாய் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 6-30 மணியளவில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று மீனவர்கள் கொல்லப்பட்டனர்; ஏழு மீனவர்கள் காணாமற் போயுள்ளனர்; அவர்கள் பயணம் செய்த படகுகள் சேதமுற்ற நிலையில் மீட்கப்பட்டன.

நேற்று 5 கட்டுமரங்களில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர்.

அதனையடுத்து மீனவர்கள் அனைவரும் கடலில் குதித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் தாக்குதல் பெண் காயம்

வடமராட்சி, பெப். 19

பருத்தித்துறை, மூர்க்கம், இன்பருட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் நேற்று கடற்படையினரின் பீரங்கிப் படகு ஒன்று நடத்திய தாக்குதலில் பெண் ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கடும் மழை மா ஏற்றும் வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

திருகோணமலையில் நேற்று பெய்த கடும் மழையால் 'ஹெற்தல' கப்பலில் மா ஏற்றும் வேலைகள் பாதிக்கப்பட்டதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

இன்று மழை பெய்யாவிட்டால் கப்பலில் மா ஏற்றப்படும் என்றும் —

மா ஏற்றப்படும் பட்சத்தில் நாளை அக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்துசேரும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

## கோமாரி திங்களன்று காங்கேசன் வந்து சேரும்

யாழ்ப்பாணம், பெப். 19

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் ''கோமாரி'' கப்பல் நாளை மறுதினம் காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து இன்று வடக்கு நோக்கி புறப்படும் இக்கப்பல் நாளை மறுதினம் காங்கேசன்துறைக்கு வந்து, தீவுப்பகுதி மக்களுக்கான உணவுப் பொருள்களை மூன்று தினங்கள் அங்கு இறக்கும் என்றும் —

அதன் பின்னர் பருத்தித்துறைக்கு வந்து பொருள்கள் இறக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சிசிலுக்கு தூதுவர் பதவி: சு.கட்சி எம்.பி. எதிர்ப்பு

### ஜனாதிபதிக்குக் கடிதம்

முன்னாள் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா தாய்லந்துக்கு இலங்கைத் தூதராக நியமிக்கப்படுவதற்கும்—

வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரட்னா இந்தியாவுக்கு இலங்கைத் தூதராக நியமிக்கப்படுவதற்கும்—

எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி எம்பி நிமால் சிறிபால டி சில்வா ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

பூநகரி இராணுவ முகாம் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சி அடைந்ததற்கானபொறுப்பை ஏற்றுக்கொண்ட இராணுவத் தளபதிக்கு ராஜதந்திரி பதவி வழங்கப்படுவது மரபுக்கு முரணானது என்றும்—

அவர் தாய்லந்துக்கு தூதராக நியமிக்கப்படும் விஷயம் அந்த நாட்டின் மன்னருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தாம் அறிந்து கொண்டதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## ஐ.நா. தூதரக அதிகாரிகள் வார இறுதியில் மடுவுக்கு!

கொழும்பு, பெப். 19

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் இவ்வார இறுதியில் மன்னார் மடு அகதி முகாமுக்குச் செல்லவிருக்கின்றனர் என அறிவிக்கப்படுகிறது.

மீண்டும் தனது பணிகளை வடபகுதியில் ஆரம்பிப்பதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஏற்கனவே தீர்மானம் எடுத்திருந்தது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்தே தூதரக அதிகாரிகள் மடுவுக்குச் செல்கின்றனர்.

மடு முகாம் அசம்பாவிதத்தைத் தொடர்ந்து ஐ. நா. அகதிகள் தூதரகம் கடந்த மூன்று மாதங்களாக அங்கு தனது பணிகளை இடைநிறுத்தியிருந்தது தெரிந்ததே. (உ-6)

## மட்டக்களப்பில் புதிய முகாம்

யாழ்ப்பாணம், பெப். 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள நெல்லிக்காடு, கனிமடுப்பகுதியில் இப்புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு, பெப். 19

பிரபல பத்திரிகையாளர் ரிச்சாட் டி சொய்ஸாவின் படுகொலை குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரி சட்டமா அதிபரின் அலுவலகத்தின் முன்னால் சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் நேற்று நடத்தவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியை கலகம் அடக்கும் ஆயுதப் பொலீஸார் தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஹல்ஸ்டோர்பில் உள்ள நீதிமன்ற வளாகத்தின் முன்னால் அமைதியாக நடத்தப்பட்டது.

ரிச்சாட் டி சொய்ஸா படுகொலை செய்யப்பட்டு நேற்று நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைந்ததை ஒட்டி நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், சமய நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (உ-6)

## பங்கீட்டு அட்டைக்கு 2 கிலோ சீனி

யாழ்ப்பாணம், பெப். 19

கோமாரி கப்பலில் எடுத்து வரப்படும் சீனியை, குடும்பத்துக்கு 2 கிலோ என்ற அடிப்படையில், பங்கீட்டு அட்டைகளுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [இ-162]

## சடலங்கள் புதைக்கப்பட்ட பகுதியில் பூநகரி சிப்பாய்கள்

### தண்ணீர் வசதியின்றி அவல வாழ்க்கை

கொழும்பு, பெப். 19

மணலில் ஆயிரக்கணக்கான சடலங்கள் புதைந்து கிடக்கின்றன. அவற்றுக்கு இடையே சிறிய குடிசைகளை அமைத்து தங்கியிருக்கிறோம். குடிப்பதற்கும் குளிப்பதற்கும் தண்ணீர் கிடையாது. ஒன்றரை அடி ஆழத்தில் குழிதோண்டி தண்ணீர் எடுத்துக் குடித்தும், குளித்தும் வருகிறோம். புதையுண்ட சடலங்கள் அழுகி அவற்றிலிருந்து வெளியேறும் மணம் சில சமயம் இத்தண்ணீரில் அடிக்கடி கலந்துவிடும். அப்படியான தண்ணீரைக் குடித்து ஒரு மோசமான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த விமானப்படைக்கு 1 நாள் போதும்!

### ஓய்வு பெற்றுச் செல்லும் தளபதி கூறுகிறார்

வடக்கு — கிழக்கு தீவிரவாதத்தை 24 மணி நேரத்திற்குள் கட்டுப்பாட்டில் கொண்டுவர ஸ்ரீலங்கா விமானப் படையினரால் இயலும்.

இவ்வாறு இந்த வார முற்பகுதியில் ஓய்வுபெற்று சென்ற விமானப்படைத் தளபதியான எயர் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு சிங்கள வார இதழான 'திவயின' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஆனால் அப்பாவி மக்களுடைய வாழ்க்கையை, அழித்து இந்த யுத்தத்தை வெல்ல வேண்டும் என படையினர் எவரும் விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறியதாக 'திவயின' குறிப்பிட்டுள்ளது. (உ-9)

## இலங்கை திரும்பி தேர்தலில் பங்குபற்ற ஈ.பி.டி.பி முயற்சி!

### தமிழக முகாமில் ஈ. பி. ஆர். எல். எவ். உடன் மோதல்

சென்னை, பெப். 19

இலங்கை திரும்ப விரும்பும் ஈ. பி. டி. பி. இயக்கத்தினருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினருக்கும் இடையில் மோதல் மூண்ட சம்பவம் அண்மையில் தமிழ்நாடு 'புழல்' அகதி முகாமில் இடம்பெற்றது.

சென்னையை அடுத்துள்ள புழல் அகதி முகாமில் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரும் ஈ. பி. டி. பி. இயக்கத்தினரும் தங்கியுள்ளனர்.

இந்த முகாமில் உள்ள ஈ. பி. டி. பி இயக்கத்தினர் இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் கலந்து கொள்வதற்காக தம்மை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு அங்குள்ள அதிகாரிகளை நச்சரித்து வருகின்றனராம்;

இதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் எதிர்ப்புத் தெரிவிக்கவே அது பெரும் மோதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலின் போது 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இவர்களில் பதினொரு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர் குழு ஒன்றை முகாமில் அழைத்து தமக்கு விரோதமானவர்களை சிறையில் அடைப்பது போன்று அடைத்து வைத்து சித்திரவதை செய்துவருவதாக ஈ. பி. டி. பியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேசமயம், புழல் முகாமில் ரொஸாமி என்பவர் தற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



புதைச்சதுகளை காவல் செய்கினம் போலை ....!

## தேசத்துரோகம் என கூறினும் தமிழீழ ஆதரவு மாறாது

### கோபாலசாமி கூறுகின்றார்

தமிழீழத்தை ஆதரிப்பது தேசத்துரோகம் என்றால், தொடர்ந்து அதனைச் செய்யவே நான் விரும்புகின்றேன்.

தி.மு.க (வை. கோ) அணித் தலைவர் திரு. வை. கோபாலசாமி முன்கண்டவாறு தெரிவித்தார்.

''நீதியின் போர் வாள்'' என்ற மாதமிருமுறை பத்திரிகையின் வெளியீட்டு விழாவில் பேசிய போது அவர் முன்கண்டவாறு கூறினார்.

'நான் இலங்கை சென்றது [illegible] தமிழீழத்தை உருவாக்க [illegible] தலைவர் கருணாநிதி கூறியிருப்பது உண்மை அல்ல' — என்றும் அவர் சொன்னார்.

பத்திரிகையின் முதலாவது பிரதியை தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ப. நெடுமாறன் பெற்றுக் கொண்டார்.

சென்னை பெரியார் திடலில் இவ்வெளியீட்டு விழா நடைபெற்றது. (இ-எ)

## சிங்கள வாக்காளருக்கும் ஐ.தே.க. கிழக்கில் அழுத்தம்

கொழும்பு, பெப். 19

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக, அம்பாறை மாவட்டத்தில் சகல சிங்களக் கிராமங்களில் உள்ள வாக்காளர்கள் மீது ஐக்கிய தேசியக் கட்சி சட்ட விரோதமான முறையில் அழுத்தங்களை, அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு பிரயோகித்து வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

திகாமடுள்ள சுதந்திரக்கட்சி எம். பியான ரீ.ஏ கே. தேவாரப்பெருமா இக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

கிழக்கில் பணி புரியும் பொலீஸ் அதிகாரிகள் பலரும் ஐ. தே கட்சியின் முகவர்களாக இருந்து ஆதரவு திரட்டுவதாக முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் குற்றஞ்சாட்டியது தெரிந்ததே

இதேவேளை —

தென் மாகாணத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் அலுவல்களுக்கு அரச அதிகாரிகளைப் பயன்படுத்தி வருவதாக தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

பொது மக்கள் முன்னணியின் சார்பில் திரு தொடங்கொட முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

## பட்டதாரி பயிலுநர் ஊழியர் சம்பள முரண்பாடு நீங்கும்

கொழும்பு, பெப். 19

பட்டதாரி பயிலுநர் ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் விரைவில் நீக்கி வைக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் கீழ் 300 பேர் திட்டமிடல் பணிப்பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் நியமனம்பெற்ற ஊழியர்களுக்கு வருடாந்தம் 49 ஆயிரத்து 200 ரூபா சம்பளமாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப். 19

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [இ-3]

## கொள்ளைக்காரி பூலான்தேவி 70 வழக்குகளிலும் விடுதலை!

### உரிய பாதுகாப்பு வழங்கவும் பணிப்பு

புதுடில்லி, பெப். 19

கடந்த 13 ஆண்டுகளாக சிறைவைக்கப் பட்டிருந்த பிரபல வட இந்திய கொள்ளைக்காரி பூலான்தேவி வழக்கு விசாரணை இன்றி விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கான உத்தரவை புதுடில்லி உயர் நீதி மன்றம் நேற்று பிறப்பித்தது.

விடுதலை செய்யப்பட்டுள்ள பூலான்தேவிக்கு பாதுகாப்பு வழங்கும்படியும் —

அதற்காக மெய்ப்பாதுகாவலர்களைக் கடமையில் ஈடுபடுத்தும்படியும் —

பொலீஸாரை நீதிமன்றம் பணித்திருக்கிறது.

உத்தரப்பிரதேசத்திற்கு தாம் திரும்பிச் சென்றால் தமது பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படும் என்று பூலான்தேவி அச்சம் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவரை புதுடில்லியிலே தங்கும்படி நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

பூலான்தேவிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 70 வழக்குகளையும் உத்தரப்பிரதேச மாநில அரசு வாபஸ் வாங்கியதைத் தொடர்ந்தே அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல் குற்றங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தி எதிர்ப்புப்போரில் தி.மு.க. மீண்டும் குதிக்கும்

சென்னை, பெப். 19

தமிழ் நாட்டில் இந்தித்திணிப்பை எதிர்த்து 12 மணி நேர ரயில் நிறுத்தப் போராட்டம் ஒன்றை இம்மாதம் 28 ஆந் திகதி நடத்தப் போவதாக தி.மு.க அறிவித்துள்ளது.

அன்றைய தினம் தமிழகத்தில் ரயில் எதனையும் ஓடவிடாது தி.மு.க தொண்டர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று தி.மு.க தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார் (இ-எ)

## ஜெயலலிதாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த திட்டம்

சென்னை, பெப். 19

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அடுத்த மாதம் மூன்றாம் திகதி வேலூருக்கு விஜயம் செய்யும் போது அவருக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டமும், உண்ணாவிரதப் போராட்டமும் நடத்தப் போவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

வேலூர் எம் எல்.ஏ திரு சி. ஞானசேகரன் இதற்கு ஏற்பாடு செய்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

பெண் பொலிஸ் நிலையம் ஒன்றைத் திறந்து வைக்க முதலமைச்சர் ஜெயலலிதா வேலூருக்கு விஜயம் செய்கிறார்.

வேலூரில் நிறைவேற்றப் படாதிருக்கும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றக் கோரி இந்த கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டமும், உண்ணாவிரதமும் நடத்தப்படுவதாக திரு. ஞானசேகரன் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்
# 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி,
நல்லூர்.

## எட்டாம் நாள் - இன்று
## தியாகராஜ உற்ஸவம்

வட-இலங்கை சர்வோதயத்தின் ஆதரவில்

காலை

**9-00 — 10-30** பஞ்சரத்தின ஆராதனை

★ நாதஸ்வரம்
என். கே. பத்மநாதன்
எம். பி. நாகேந்திரன்
வி. கே. கானமூர்த்தி
வி. கே. பஞ்சமூர்த்தி
ஆர். கேதீஸ்வரன்

★ தவில்
கே. நித்தியானந்தன்
மி. உதயசங்கர்
ஆர். எஸ். ரவீந்திரன்
ஆர். எஸ். சுதாகரன்
பி. முருகதாஸ்
கே. சிவகுமார்
பி. கணேசன்
என். முருகையா

**10-30 — 11 00** மங்கள விளக்கேற்றல்
இ. நடராஜா தம்பதிகள்
அ. சிவராஜா தம்பதிகள்
அ. புஷ்பமலர்
த. ரவிவா
த. மகிணகயற்கரசி
சி. விமலானந்தராணி
அ. அருளானந்தம்

தலைவர்:
திரு. க. திருநாவுக்கரசு
(வட இலங்கை சர்வோதயம்)
பிரதம விருந்தினர்:
ப்ரம்மஸ்ரீ மஹாதேவக் குருக்கள்

**11-00 — 12-00** பஞ்சரத்தின ஆராதனை
முது கலைஞர்களும் இளம் கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

**12·00 — 2·00** மதிய போசனம்

திருநெல்வேலி, லெக்ஷ்மி ஸ்ரோர்ஸ் ஆதரவில்

மாலை

**3-00 — 4-00** மங்கள இசை
எஸ். ஜெயநாதன், எஸ். ரத்தினம், வீ. சிவரத்தினம் — நாதஸ்வரம்
என். முருகானந்தம், ரி. சுந்தரம் — தவில்

**4-00 — 4-45** பாட்டு
எஸ். நாகராஜா — பாட்டு
பாக்கியலட்சுமி நடராஜா — வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்

**4 45 — 5-05** வயலினிசை
கிருஷ்ணவேணி மயில்வாகனம், சுஜாத்தா சிவசோதி — வயலின்
ப. ரதிரூபன் — மிருதங்கம்

**5-05 — 5-30** வீணை இசை
ஈ. சுதர்சனா, எஸ். குமுதினி, ரி. புவிதலக்ஷ்மி, எஸ். ஜெயமனோகரி — வீணை
எஸ். துரைராசா — மிருதங்கம்

**5-30 — 6-15** பாட்டு
மிதிலா விவேகானந்தன் — பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
எம். வர்ணகுலசிங்கம் — பாட்டு
வீ. கே. குமாரசாமி — வயலின்
வர்ணராமேஸ்வரன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
திரு. த. ஆறுமுக ஆனந்தம் (உடுப்பிட்டி)
திரு இ. தனபாலசிங்கம்
(லெக்ஷ்மி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)
திரு. க. நந்தகுமார்
(கலைமகள் வர்த்தக நிலையம்)
திரு. த. தங்கேஸ்வரன் (உடுப்பிட்டி)

தலைவர்:
திரு. எஸ். வேலாயுதம்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர்)
பிரதம விருந்தினர்:
திரு. க. கந்தசாமி
(கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலயம்-II)
சிறப்பு விருந்தினர்:
திரு. க. சோமசுந்தரம்
(மகாராணி புடைவை மாளிகை)

**7 30 — 8 15** பாட்டு
பொன். சுந்தரலிங்கம் — பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
எஸ். துரைராஜா — கஞ்சிரா
தபோதநாயகம் — கடம்

**8-15 — 9-30** வில்லிசை
கலாவினோதன் எஸ். கணபதிப்பிள்ளை (சின்னமணி) வழங்கும்
''சத்குரு ஸ்ரீ தியாகராஜர்''

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்!
**R.V.G. பீடி ஸ்தாபனம்**
நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-7321]

## ஆடை தயாரிப்போர் தேவை

பெண்களுக்குரிய ஆடைகள் வெட்டுவதில், தைப்பதில், பூப்போடுவதில் அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்தும்:

ஆண்பிள்ளைகளுக்குரிய சேட், காற்சட்டைகள் தைப்பதிலும் பிற வெட்டுவதிலும் தைப்பதிலும் திறமையும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: **25 - 2 - 1994**

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
**சிற்றி காமென்ஸ்,**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.
(29482)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் ச. சொக்கலிங்கம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

தோற்றம்: **09 — 11 — 1909** மறைவு: **20 — 01 — 1994**

பெற்றெடுத்தீர் பேணி வளர்த்திட்டீர்
பல்கலைக்கழகம், பயிற்சிக்கலாசாலை சேர்த்திட்டீர்
பார்புகழ வைத்திட்டீர் பாசமுள்ள ஐயாவே!
அப்பப்பாவே! அம்மப்பாவே! பரமன் தாள்
வேண்டுகிறோம் உங்கள் ஆத்மசாந்திக்காக!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மேற்கு.
ஏழாலை.
(29505)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### கனகசிங்கம் செல்லம்மா

தோற்றம்: **12 — 07 — 1928** மறைவு: **20 — 01 — 1994**

திதி: 19-02-1994

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
சகோதர, சகோதரிகள்
பேரப்பிள்ளைகள், மைத்துனர், மைத்துனி

92, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(29507)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 19
அரியாலை 75 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை ஒட்டிய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நான்கு ஆட்டங்கள் அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற விருக்கின்றன. (உ-3)

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த - 19 வயதுக்கு உட்பட்ட அணியினருக்கு இடையிலான - கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றும், நாளையும் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ இன்று — ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி எதிர் பற்றிக்ஸ் அணி — ஸ்கந்தா மைதானம்.

★ நாளை — யாழ். மத்திய கல்லூரி அணி எதிர் மானிப்பாய் இந்து அணி — மானிப்பாய் இந்து மைதானம்.
(உ-3)

## அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ்ப்பாணம் வந்துள்ள ஐக்கிய ராஜ்சிய சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகள் நேற்று முன்தினம் யாழ். அரச அதிபருடன் பேச்சுக்கள் நடத்தினார்கள்.

அரச அதிபருடனும், மேலதிக அரச அதிபருடனும் நடத்திய பேச்சுக்களின்போது இங்குள்ள நிலைமையைப்பற்றி அவர்கள் ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டனர்.
[ஓ-3]

## காலமானார்

கொழும்பு, பெப். 19
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் கே. எஸ். நடராசா கனடாவில் காலமானார். இவருக்கு வயது 75. நாவற்குழியூர் நடராசா என்ற பெயரில் கவிஞராகவும் புகழ் பெற்றார்.
(ஒ-எ)

## வில்லிசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 19
திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய பரதப் பிரிவு மாணவிகள் 'வீரத்துறவி' என்ற வில்லிசை நிகழ்ச்சியை பாடசாலைகள் தோறும் நடத்தி வருகின்றனர்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றை கூறும் அந்த வில்லிசை நிகழ்ச்சி எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும்—மறுநாள் 23 ஆம் திகதி திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும்—

எதிர்வரும் 28 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும்,

அடுத்த மாதம் 4 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (இ-5)

## கருத்தரங்கு

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க பிரதேச கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.
(இ-89)

## மீண்டும் போதனாசிரியர் பதவி

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் யாழ் பிராந்திய தொலைக்கல்வி நிலையத்துக்கு போதனாசிரியராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தம்மை போதனாசிரியராக நியமிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் முன்னர் விடுத்த பணிப்புரையை செயற்படுத்துமாறு யாழ், மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கு திரு. மகாசிவம் விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த பின்னரே போதனாசிரியர் பதவி வழங்கப்பட்டுள்ளது. (அ-3)

## நெரிசலில் சிக்கி 40 பேர் மரணம்

சீனாவில் நேற்று புத்தாண்டு விடுமுறையின் பின்னர் பல லட்சம் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புகையில் ரயில் நிலையம் ஒன்றில் ஏற்பட்ட சனநெரிசலில் 40 பேர் வரை உயிரிழந்தனர். மத்திய சீனாவின் ஹூனான் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (உ-6)

**ENGLISH TEACHERS' EXAMINATION - 1994**

LUXINTENEBRIS

WEEK - END Classes for the above Examination will Commence on Sunday, the 20th

Time: 10 to 11-30 a.m.
Lectures: KANDIAH NAVARENDRAN

**JAFFNA ENGLISH ACADEMY**
27, Rakka Lane, Chundikuli, Jaffna.
[C-7253]

## மூன்றாம் ஆண்டு அமரத்துவ அஞ்சலி



மலர்வு: 08 — 07 — 1929

உதிர்வு: 23 — 01 — 1991

### திருமதி செல்வரத்தினம் மகேஸ்வரி

திதி: 19 - 02 - 1994

அன்போடும், பண்போடும், பாசத்தோடும் எங்களை வளர்த்து, உற்றோரையும் மற்றோரையும் அணைத்தும், நேசித்தும் இனிதாகப் பேசி சிறப்போடு வாழ்ந்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக ஸ்ரீ சத்ய சாயி பகவானை அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

கணவன்,
பிள்ளைகள்: ஜெகதா, சோபனா, யமுனா,
மருமக்கள்: விக்னேஸ்வரன், கமலநாதன், சுந்தரகுமார்,
பேரப்பிள்ளைகள்: சித்ராங்கன், மாதங்கி, காதம்பரி

81, மாவிட்டபுரம் வீதி,
தாவடி.
(சி/7246)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



### செல்லப்பா தங்கராசா

தோற்றம்: **26 08—1972** மறைவு: **19—02—1991**

உன்முகம் காணாது உன் தாய் கதறுகிறாள்
அன்பான ராசாவே! ஒன்றாக நாம் இருந்து
ஓர் உயிராய் வாழ்ந்த தெல்லாம்
கனவாக கலைந்திடுமா? கற்பனையில் நிலைத்திடுமா?
ஆண்டு மூன்று சென்றாலும்,
நாம் உன்னை மறப்போமா?

என்றும் உன் பிரிவுத் துயரால் வாடும்:
தாய், அக்காமார், அண்ணாமார்,
அண்ணிமார், அத்தான்மார்,
பெரிய தாயார்கள், பெறாமக்கள்,
மருமக்கள்.
(29506)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நற்சேவைப் பாராட்டு

### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

சாவகச்சேரி அம்பிகா ஆங்கில மருந்தக உரிமையாளரும், சரசாலை/நுணுவில் சிதம்பர விநாயகரிடத்தில் நீங்கா இறையன்புடையவரும், அனைத்து மக்களின் மனதிலும் நீங்காத இடம் பிடித்தவரும், நல்வழிகாட்டியும், பிணிதீர்க்கும் சிறந்த மருத்துவரும், பண்பின் சிகரமும், பாசத்தின் உறைவிடமும், அன்புடை அருளாளருமாய் விளங்கிய ''சிவநெறிச் செம்மல்'' ச. நமசிவாயம் அவர்களின் மறைவு மக்களுக்கும், தமிழ் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னார் உருவத்தால் சிறியவராயினும் உள்ளத்தால் பெரியவர் ஆவார். ஏழை, எளியவர் என்றும் பணக்காரர் என்றும் பாகுபாடின்றி மருத்தாளராகப் பணி புரிந்தார். மருந்தின் பக்கவிளைவுகளை, மருந்து விநியோகிக்கும் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து தனது சேவையை மக்களுக்கு வழங்கி வந்தவர்களில் இவர் முதன்மையானவர் என்பது மருந்து விற்பனைப் பிரதிநிதிகளாலேயே அங்கீகரிக்கப்பட்ட உண்மையாகும். ஆயுள்வேத வைத்தியர்களின் நன்மதிப்புக்குரிய ஆலோசகராகவும் இவர் விளங்கினார்.

பாதயாத்திரை செய்யும் யாத்ரீகர்கள் நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்துக்குச் சென்று தங்குவது வழக்கம். அப்போது அவர்களை முன்நின்று உபசரிப்பதில், அடியார்க்கு அடியாராகவும் அவர் விளங்கினார்.

ஏழை, எளிய மக்களுக்கு உதவுவதில் தாராள மனப்பான்மை கொண்ட அன்னாரிடம் உள்ள ஒரு நல்ல பண்பு மற்றைய வைத்தியர்களைக் குறை கூறாது அவர்களைப் பெருமையுடன் புகழ்வதே ஆகும்.

மது அருந்துபவர்களுக்கு அவர் ஒரு விரோதி.

எனது நண்பராகிய அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றேன்.

வீ. பொ. கார்த்திகேசு,
ஜே. பி. யு. எம்,
சட்டத்தரணி.

சாவகச்சேரி. (சி–7254)

## முக்கிய அறிவித்தல்

வலி. வடக்கு கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கம்
தெல்லிப்பழை. (வரையுள்ளது)

### கிளைக்குழுத் தேர்தல்

திகதி: **5-3-94** சனிக்கிழமை

நியமனப்பத்திரங்கள் ஏற்றல் —
காலை 9.00 — 10.00 மணி வரை

ஆட்சேபனைகளை ஏற்றல் —
காலை 10.00 — 11.00 மணி வரை

| கிளையின் பெயர்; | இல. | நியமனப் பத்திரங்கள் ஏற்கும் இடம்; |
|---|---|---|
| தெல்லிப்பழை - வடமேற்கு | 1 | யா/ திருஞானசம்பந்த வித்தியாசாலை, சுன்னாகம். |
| தெல்லிப்பழை - தென்மேற்கு | 2 | |
| தெல்லிப்பழை | 3 | |
| வீமன்காமம் | 4 | |
| காங்கேசன்துறை | 5 | |
| மாவிட்டபுரம் | 6 | |
| தையிட்டி | 7 | |
| தென்மயிலை / குரும்பசிட்டி | 9 | |
| கட்டுவன் | 12 | |
| அளவெட்டி - வடக்கு | 13 | காால்நடை வைத்தியர் பணிமனை, சுன்னாகம். |
| அளவெட்டி - தெற்கு | 14 | |
| மல்லாகம் | 15 | |
| சுன்னாகம் - கிழக்கு | 17 | |
| சுன்னாகம் - மேற்கு | 18 | |
| ஏழாலை - வடக்கு | 19 | யா/ விக்கினேஸ்வரா வித்தியாலயம், குப்பிளான். |
| ஏழாலை - தெற்கு | 20 | |
| புன்னாலைக்கட்டுவன் | 21 | |
| குப்பிளான் | 22 | |

வை. சுப்பிரமணியம்
செயலாளர்

எ. சின்னத்தம்பி
தேர்தல் உத்தியோகத்தர்

(7006)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 11 — 07 — 1942



விண்ணில்: 20 — 01 — 1994

### அமரர் நல்லையா குணசிங்கம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் ஒளிபரப்பி, வழிகாட்டி எமை அளாக்கி இறைபதம் அடைந்த எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

துரை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பிரேமாவின் மறைவுக்குப் பின்னர்

# பிரதேச சாதிப் பாகுபாட்டை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது!

## ஐ. தே. க. பிரமுகர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மறைவுக்குப் பின்னர் தற்போதைய அரசாங்கம் பிரதேசச் சாதிப் பாகுபாடுகளைக் கடைப்பிடித்து வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தமது பெயரை வெளியிட விரும்பாத கலைக்கப்பட்ட தென்மாகாண சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் இவ்வாறு குற்றஞ்சாட்டி இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அனுராவுக்கும் காமினி திசாநாயக்காவுக்கும் ஆதரவானவர்கள் எதிர்வரும் தென்மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

இதனால் தென்பகுதியில் உள்ள, ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் கவலையடைந்துள்ளனர் என்றும்—

இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடையக் கூடும் என்றும் அந்த உறுப்பினர் தெரிவித்தார். (ஒ-எ-6)

## திட்ட பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 19

எதிர்காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்கான கொள் விலை 23 ரூபாவாகவும், விற்பனை விலை 25 ரூபாவாகவும் இருக்க வேண்டும் என்று—

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டதாக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அறிவிக்கிறார்.

''ப.நோ.கூ. சங்கங்களுக்கு கடனுக்கு யாழ். செயலகத்திலிருந்து பொருள்'' என்ற தலைப்பில் உதயன் 16.2.94 இதழில் வெளியான செய்தியில் —

சென்ற வருடம் செப்டம்பர் மாதத்தில் இருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்த மண்ணெண்ணெய்க்கு, ஒரு லீற்றருக்கு 1 ரூபா என்ற விகிதப்படி சேவைப் பணம் வழங்குதல் — எனக் குறிப்பிடப்பட்டது சம்பந்தமாக விளக்கம் அளிக்கையிலேயே திட்டப்பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

ஒரு பரலில் உள்ள மண்ணெண்ணெயின் சராசரி அளவு 205 லீற்றர் எனக் கணக்கிடுவது என்ற பிரேரணை கலந்துரையாடலில் ஏற்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## தொண்டமனாறில் ஹெலி வேட்டு

வடமராட்சி, பெப். 19

தொண்டமனாறு அக்கரைப் பகுதியில் ஹெலிகொப்டர் தாக்குதல்களை நடத்தியது.

வியாழன்காலை 9.30மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் அப்பகுதிக்கு ஹெலி ஒன்றும் பொம்மர் ஒன்றும் வந்து பல தடவைகள் வட்டமிட்டன.

ஹெலி 50கலிபர் துப்பாக்கி தாக்குதல்களை மேற்கொண்டது. பொம்மர் பல தடவைகள் வட்டமிட்டு குத்திப் பதிந்து பயமுறுத்தியது. (ஒ–173)

## சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், பெப். 19

வவுனியா செட்டிகுளம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை காலை இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா இராணுவ வட்டாரங்கள் இச் சம்பவத்தை வர்ஜிதம் செய்தன. (இ-3)

## இந்திய அமைச்சரவையில் மேலும் இருவர்

புதுடில்லி, பெப். 19

இந்திய மத்திய அமைச்சரவையில் புதிதாக இருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

திரு. ராம் லகன்சிங் யாதவ் இரசாயனம் மற்றும் உரங்கள் துறைக்கானகபினெட் அமைச்சராகவும்—

முதல் தடவையாக மிசோரம் மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் சி. சில்வேரா சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை இணை அமைச்சராகவும் ஜனாதிபதியினால் [illegible] வைக்கப்பட்டனர். [illegible]

## புதிய துணை வேந்தர் தெரிவு:

### பல்கலைக்கழக பேரவை 26 ஆம் திகதியன்று கூடும்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். பல்கலைக்கழக புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக பேரவை எதிர்வரும் 26ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கூடவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராகப் பணிபுரியும் பேராசிரியர் அ. துரைராஜா அடுத்தமாதத்துடன் பதவி துறக்கிறார். இதனையடுத்தே புதிய துணைவேந்தரை தெரிவு செய்ய பேரவை கூடவிருக்கிறது.

பேரவை மூன்றுபேரின் பெயர்களைத் தெரிவு செய்ய வேண்டும். மூவரின் பெயர்களுக்கு கூடுதலாக பிரேரிக்கப்பட்டால் தேர்தல் நடத்தப்படும்.

பேரவையால் தெரிவு செய்யப்படும் மூவரில் ஒருவரை ஜனாதிபதி துணைவேந்தராக நியமிப்பார். (ஒ-3)

## வலி. மேற்கு மீனவருக்கு நான்கு வார நிவாரணம்

### பிரதேச செயலாளர் ஏற்பாடு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு இரண்டு வாரங்களுக்கான இலவச உலர் உணவு வழங்கப்படவுள்ளது இதற்கான நடவடிக்கைகளை வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் சுமார் ஆயிரத்து 25 பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு நான்கு வாரங்களுக்கான இலவச உலர் உணவு வழங்குவதற்குரிய அனுமதியை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்கி இருந்தனர்.

அதைத் தொடர்ந்து உடனடியாக இரண்டு வாரங்களுக்கான இலவச உலர் உணவு விரைவில் வழங்கப்படவுள்ளது. (ஒ-175)

## காங்கேசன் ஆலை விவகாரம் ஏப்ரல் மாதத்திலேயே முடிவு

யாழ்ப்பாணம், பெப். 19

காங்கேசன் சிமெந்து ஆலையை மூடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் ஏப்ரல் மாதத்திலேயே எடுக்கப்படும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சிமெந்துக் கூட்டுத்தாபன தலைமையலுவலக அதிகாரிகள் கொழும்பு பதில் மேயர் திரு.கே. கணேசலிங்கத்துடன் நடத்திய பேச்சுக்களின் போதே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை ஆலையை மூடி, ஆலைத் தொழிலாளர்களுக்கு ஜனவரி 15 ஆம் திகதியுடன் வேலை நிறுத்த முன்னறிவித்தல் வழங்க முன்னர் ஏற்பாடாகியிருந்தது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு. சிறிசேன கூரே தற்சமயம் கட்சி விடயங்களில் ஈடுபட்டுள்ளதால் ஏப்ரல் மாதத்திலேயே இவ்விடயம் தொடர்பான பேச்சுகளை நடத்துவார் என்று திரு கணேசலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை — சிமெந்து தொழிலாளர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பில் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். (உ-3)

## தமிழக மீனவர் விவகாரம்

### ஜெயலலிதா மீண்டும் பிரச்சினை கிளப்புகிறார்

சென்னை, பெப். 19

தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இராமநாதபுரம் பகுதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசியபோது முன் கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் அடிக்கடி ஸ்ரீலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாவதினால் தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலை இருந்து வருவது தெரிந்ததே.

கடந்த திங்கட்கிழமையும் கச்சதீவுக்கு அருகே ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் நான்கு தமிழக மீனவர்கள் காயம் அடைந்திருந்தனர். (இ எ)

## இந்து இளைஞர் மன்றங்கள் சமயப்பணி புரிய வேண்டும்

### நல்லை ஆதீன முதல்வர் உரை

''இளைய தலைமுறையினருக்கு சமயம் முக்கியமானது இளைஞர்களுக்கு சமய அறிவை வழங்கி சமயப் பணிகளில் ஈடுபடுவது இந்து இளைஞர் மன்றங்களின் கடமையாகும். பெயரளவில் மன்றங்கள் இருப்பதால் பயனில்லை''

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

மன்றத் தலைவர் திரு. ந. சர்வகுணசீலன் தலைமையில் இப்பரிசளிப்பு விழா நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்சமயம் எமது சமயமும், கலை, கலாசாரமும் ஒழுங்காக அனுஷ்டிக்கப்படவில்லை. இதனைச் சீர்திருத்த இந்து இளைஞர் மன்றங்கள் செயலில் ஈடுபடவேண்டும்.

சமய அறிவுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதியில் மன்றச் செயலாளர் கே. மோகனச்செல்வன் நன்றியுரை கூறினார். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு அலுமாரியும் (கபேட்), இரண்டு கபேட் 3' உயரம் 3' அகலம்கொண்டதும், 6' நீளம் உள்ள (Office Table) 1 பெட்டியும், (Coffer Shelf) உடன் விற்பனைக்குண்டு சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (29498)

றோணியோ இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகராச் சந்திக்கு அருகில்). (6975)

இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிறு, புதன் கிழமைகளில் காலை 8-00 — 10-30 மணி வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29520)

அடை வைக்கக்கூடிய தலை இன கோழி முட்டைகளும், பண்டம் கோழி முட்டைகளும், வான்கோழி முட்டைகளும் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29372)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஹைலைன் 6 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்வம் வீதியூடாக சாம், வெஸ்லி சிங்கம் வீதி, உடுவில். (7005)

Lohmann Brown சேவற் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Prima Lohmann, Broiler குஞ்சுகள் ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யவும்: நல்லூர் வீடியோ சென்ரர், முத்திரைச் சந்தையடி, நல்லூர். [29519]

### வெளிவந்துவிட்டது

இந்திய தமிழ் நூல்கள் வரலாற்று மற்றும் ரமணிச்சந்திரன், லக்ஷ்மி, பட்டுக்கோட்டை பிரபாகரன் ஆகியோரின் நாவல்கள் சிறுகதைகள் மற்றும் ஆங்கில வைத்திய புத்தகங்கள், பொக்கற் கலண்டர்கள் விற்பனையாகின்றன. கிடைக்குமிடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (சி-7252)

### விற்பனையாகின்றது

புதுவருட திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிறது. சில்லறைக்கும், தொகைக்கும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 60-00. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (29491)

### உடன் விற்பனைக்கு

அல்சேஷன் ஜேமன் செப்பட் பெண் நாய் [1 வயது] சகல தடுப்பூசிகளும் ஏற்றப்பட்ட நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வேல்கணேஷ்யம், 887, நட்டா தெருச்சந்தி. யாழ்ப்பாணம். [29478]

### சனிப்பெயர்ச்சி

சனிபகவான் 11-02-1994 முதல் 28-04-1994 வரை 12 ராசிகளுக்கும் ஓரே புத்தகம் விலை 20/- கணிப்பு: என். வெங்கடராமய்யர்கார், தியாக நகர், சென்னை. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7235)

### சுற்றாடற்கல்வி

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான சுற்றாடற் கல்வி செயல் நூல் விற்பனையாகிறது. கல்வியமைச்சின் புதிய பாடத்திட்டத்திற்கமைய ஆக்கப் பெற்றது. ஆக்கம்: த. துரைசிங்கம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [29483]

### மணமகன் தேவை

யாழ். இந்து 25 வயது நல்ல உயர் குடும்பத்தைச் சேர்ந்த சித்திரை 3ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லாத, 5'-3" உயரமுள்ள, வேம்படியில் படித்து A/L சித்தியடைந்த, Diploma [Computer Studies] செய்த அழகான பெண்ணுக்கு இலங்கையில் / வெளிநாட்டில் வேலைபார்க்கும் உயர்கல்வியுடைய மணமகன் தேவை. ஜாதகக்குறிப்பு, முழுவிவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். 613, மே/பா உதயன். (29500)

நல்ல கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சதைய நட்சத்திர, சைவ போசனமுடைய 38 வயதுடைய பெண்ணிற்கு ஆசிரியர் அல்லது தகுந்த வரனைத் தேடுகிறார்கள். ஜாதகம் முழு விவரத்துடன் விண்ணப்பிக்கவும். 614, மே/பா, உதயன். (29522)

### பாலர் ஆசிரியராக

தகைமை க. பொ. த [சா/த] சனி, ஞாயிறு பயிற்சிக்கு வரமுடியாதோர் தபால் வழியிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6979)

### வரலாறு – சமூகக்கல்வி

ஆண்டு 8 வரலாறும் சமூகக் கல்வியும் வினா - விடைகள் பகுதி I, பகுதி II உள்ளடக்கியது. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தனித்தனியே வினா – விடைகள் தரப்பட்டுள்ளது. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். ஆக்கம்: நா. மயில்வாகனம். சென் ஜோன்ஸ் கல்லூரி. (29486)

### காசாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் புகைப்பட நிலையத்தில் பணியாற்றுவதற்கு பெண் பணியாளர் தேவை. கல்வித் தகைமை மற்றும் சுயவிவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்குக. 611, மே/பா உதயன், நாவலர் வீதி. (29471)

### மணமகள் தேவை

36 வயதுடைய பூரட்டாதி, தொலைத்தொடர்பு உத்தியோகத்தருக்கு படித்த மணமகள் தேவை. முழுவிவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்க: திருமதி ப. மகேஸ்வரி, தொல்புரம், சுழிபுரம். (7004)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

யாழ். நகர்ப்புற சுகாதாரப் பரிசோதகர் திரு. து. மகாதேவாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி கருத்தரங்கிற்கு யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமை வகிப்பார்.

## குஜராத் முதல்வர் மரணம்

குஜராத் முதல்வர் திரு. சிமன்பாய்பட்டேல் மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

அவருக்கு அஞ்சலி தெரிவித்து நாடு முழுவதும் இரண்டு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என இந்திய அரசு அறிவித்துள்ளது. (இ-க-5)

---

கோப்பாய் வடக்கு
ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி

## தேவஸ்தானம் பரிபாலன சபை பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 20-02-1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் இடைக்கால பரிபாலன சபைத் தலைவர் தலைமையில் நிகழும்.

நிரந்தர பரிபாலன சபைக்குரிய 15 உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெறும்.

அங்கத்தவர்கள் தவறாது சமூகம் தந்து ஒத்துழைப்பு நல்கவும்.


க. தர்மராஜா, தலைவர்.
ஐ. சிவலோகநாதன், செயலாளர்.

இடைக்கால பரிபாலன சபை

(29517)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22— 08 — 1937
மறைவு: 06 — 01 — 1994

எமது தலைவர், "சிவநெறிச்செம்மல்"

## அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

அவர்களுக்கும்

30-12-1993 அன்றைய விமானத் தாக்குதலில் மரணித்த சகவர்த்தகருக்கும், வர்த்தக ஊழியர்களுக்கும், ஏனைய பொதுமக்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

- கைத்தொழில் வர்த்தகர் சங்கம்,
சாவகச்சேரி.

[29518]

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி விஜயலக்ஷ்மி கயிலைநாதன்

மலர்வு: 21 — 08 — 1956
உதிர்வு: 05 — 03 — 1990

திதி: 19 — 02 — 1994

அன்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் நான்கு சென்றாலும், உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்,
(மகள்: கோபிதா)

சேச் ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்.

---

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்: 18 — 07 — 1917



மறைவு: 02 — 03 — 1993

## திருமதி சின்னத்துரை கனகமுத்து

திதி: 19—02—1994

மீண்டும் ஒருமுறை எழுந்து வர மாட்டாயோ! எம் அன்புத் தாயே! எம் அன்புத் தாயே! இடரென்று எங்கேயம்மா சென்று மறைந்தாய்! எம்மைச் சுமந்து பாசத்துடன் பெற்றெடுத்து சீராட்டி அன்பினையும், அறிவினையும் ஊட்டி வளர்த்த எம் தெய்வமே! இன்பமுடன் நாம் வாழ வழி சமைத்தவரே, தனியே எம்மைத் தவிக்கவிட்டு சென்றுவிட்டீர்! உமது அன்பும் ஆதரவும் இல்லாது தனிமையில் கலங்குகின்றேன். தாயின் குரலைக் கேட்காது தவிக்கின்றேன். உமது நினைவலைகள் ஒவ்வொரு நிமிடமும் எம்முடன் வாழுதம்மா!

உம் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனை வேண்டி நிற்போம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரிகள்.

திருமதி அற்புதநாயகி சரவணமுத்து,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(29518)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிங்கமாகவே காட்டுமா?

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கப்பலில் வந்து சேரும் உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி இருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

அந்த வகையில், "ஹெந்தல" என்ற கப்பலில் இங்கு வந்து சேரும் கோதுமை மாவின் விலை கிலோ ஒன்றுக்கு நான்கு ரூபா உயரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறே அரசாங்கம் குடாநாட்டுக்கு அனுப்பும் பொருள்கள் யாவற்றுக்கும் மக்கள் அதிக விலைகொடுக்க நேரிடப்போகிறது!

கொழும்பிலிருந்து அனுப்பப்படும் பொருள்களுக்கு இதுவரை தான் செலுத்திவந்த கப்பல் கட்டணத்தை இனிமேல் வழங்க முடியாது என்று அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்திருக்கிறார். அதாவது யாழ்ப்பாணத்து மக்கள் மீது கப்பற்கட்டணத்தைச் சுமத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதாகும்.

யுத்தத்தைப் பிரகடனம் செய்தது அரசாங்கமே. அதனைச் சாட்டாக வைத்து, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நோக்குடன் பொருளாதாரத் தடையையும், போக்குவரத்துத் தடையையும் நடைமுறைப்படுத்தியதும் அரசாங்கமே.

இந்த இரு தடைகளும் இல்லையென்றால் வடக்கில் உணவுப் பொருள்களின் விலைகள் கொழும்பை விட நான்கு ஐந்து மடங்கு உயர்ந்திருக்க மாட்டா.

கொழும்பிலேயே பொருள்களின் விலைவாசிகள் அளவுக்கு மீறி உயர்ந்துவிட்டதாகச் சிங்கள மக்கள் அழுகிறார்கள். பத்திரிகைகள் அரசாங்கத்தைச் சாடுகின்றன. அப்படியிருக்க அவற்றைவிட ஐந்து ஆறு மடங்கு விலைகளில் உணவுப் பொருள்களை வடக்கு மக்கள் வாங்குவது எப்படி? வாழ்வது எங்ஙனம்?

போரைத் தமிழ் மக்கள் மீது திணித்துள்ள அரசாங்கம் தமிழர்களைப் பலவீனப்படுத்துவதற்காகத் தன்னால் ஆன, தனது சக்திக்கு உட்பட்ட சகல அழுத்தங்களையும் அவர்கள் மீது போட்டு வருகிறது. அநீதிகளையும், கொடுமைகளையும் புரிந்து வருகிறது.

எனினும் தமிழர்கள் அரசின் பிரசைகளே என்று உரிமை கொண்டாடும் ஒரேயொரு நோக்கத்துக்காகவே அரை குறை உணவுப் பொருள்களைக் கப்பலில் அனுப்பிக் கொண்டிருக்கிறது. தமிழர்களின் நலன்களில் தனக்கு அக்கறை உண்டு என்று உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காகவே இவ்வித செயற்பாடு.

போரைத் தொடர்வதற்காக, தமிழர்களைக் கொல்வதற்காக கோடானு கோடி ரூபாக்களைச் செலவிடும் அரசுக்கு, தமிழர்களுக்கு உணவுப் பொருள் அனுப்புவதற்கான கப்பல் கட்டணச் செலவு தான் பெரும்பளுவா?

அவ்வாறெனின் தமிழர்களுக்கு, வடக்கு வாழ் மக்களுக்கு தன்னால் உணவு அனுப்ப முடியாது என்று அரசாங்கம் வெளிப்படையாக அறிவித்து அதை நிறுத்திவிடட்டும்! தமிழர்களுக்கு உணவு போடத் தன்னிடம் பணம் இல்லை என்று கூறி உணவு அனுப்புவதையும் வேண்டுமானால் நிறுத்திவிடட்டும்!

அப்போது சர்வதேச மனிதநேய அமைப்புகளாவது தமிழர்களின் "அவல" நிலை கண்டு உதவிக்கு வரலாம்.

அரசாங்கத்தினால் தமிழர் கைவிடப்பட்டால் அங்கு ஓர் அரசாங்கம் இல்லை என்ற நிலையில் வடக்கு மக்களை உலகம்பார்க்கும் புதிய பரிமாணம் ஒன்று தோன்றும்.

உலகத்துக்குத் தமிழர் தனது பிரசைகளே என் தலையையும், தமிழர்களுக்குக் கொடுமை செய்து வாலையும் காட்டும் விலாங்காக இருக்க வேண்டாம். உண்மையான ஈவிரக்கமில்லா சிங்கமாகவே சுயரூபத்தைக் காட்டுமா?

# இராஜ கிராமத்தில் 15 வீத மக்கள் பாடசாலைக்கே செல்லாதவர்கள்!

## அதனை முன்னேற்றுவதற்கு விடுதலைப்புலிகள் செயலில்!!

யாழ்ப்பாணம், பெப். 19

வடமராட்சிப் பகுதியில் நெல்லியடிச் சந்தியில் இருந்து கிழக்கே 400 யார் தூரத்திலுள்ள இராஜ கிராமத்தில் 287 குடும்பங்கள் வசிக்கின்றன.

பின்தங்கிய நிலையில் இருக்கும் இந்தக் கிராமத்தில் ஏறக்குறைய 15 வீதமான மக்கள் பாடசாலைக்கே செல்லாதவர்கள்.

இங்குள்ள சுமார் 200 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றன. அடிப்படை சுகாதார வசதிகள் குறைந்த இந்தக் கிராமத்தில், மக்கள் போஷாக்கு பிரச்சினையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் —

இக்கிராமத்தை முன்னேற்றும் ஒரு நடவடிக்கையாக விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக —

இராஜ கிராமத்தில், கிராமிய பாசறையும் கண்காட்சியும் கடந்த 15 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை வரை அவை நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இதற்கிடையில், இக்கிராமத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அங்கு அவர் கூறியதாவது:

நாம் அரசியல், ராணுவ ரீதியில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற நிலையில், தமிழீழத்தில் பல கிராமங்கள் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. அவ்வாறான சில கிராமங்களைத் தெரிவுசெய்து அந்த மக்களை பொருளாதார, அறிவியல், சுகாதார, கல்வி ஆகிய துறைகளில் முன்னேற்றமடையச் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளோம். அதன் அடிப்படையிலேயே கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள சில கிராமங்களைத் தெரிவுசெய்து அவற்றை முன்னேற்ற வழிகளில் இட்டுச் செல்வதற்காக இந்த கிராமிய பாசறை அமைக்கப்பட்டுள்ளது.— என்றார்.

மகளிர் அமைப்பின் தமிழீழ அரசியல் உதவிப் பொறுப்பாளர் தமிழவள் செய்தியாளர் மத்தியில் பேசும்போது—

இங்குள்ள சில கிராமங்களில் பெண்களின் நிலைமையைப் பார்க்கும்போது யாழ். மாவட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இவர்களின் நிலை மிக பின்தங்கிய நிலையிலே உள்ளது. எனவே இவர்களுக்கு சமூக அறிவை வளர்க்க பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள உள்ளோம் — என்றார்.

தமிழீழ மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் பாஸ்கரன் பேசுகையில், ஏற்கனவே பண்டத்தரிப்பில் நிச்சாமம் என்ற பகுதியில் இது போன்ற கிராமிய பாசறையை மேற்கொண்டோம். இப்பொழுது அந்தக் கிராமம் மிக முன்னேற்றமடைந்துவிட்டது. அதே போல இந்த கிராமங்களும் முன்னேற்றமடையும் — என்றார். (ஓ-9)

## இசை விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 19

இளங்கலைஞர் மன்ற இசை விழா எட்டாம் நாளான இன்று காலை 9 மணி முதல் 12 மணிவரை வட இலங்கை சர்வோதயத்தின் ஆதரவில் தியாகராஜ உற்சவம் நடைபெறும்.

வட இலங்கை சர்வோதய தலைவர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் என். கே. பத்மநாதன், கே. நித்தியானந்தன் மற்றும் முது கலைஞர்கள் இளங்கலைஞர்களின் பஞ்சரத்தின ஆராதனை மதியபோசனம் என்பனவும் இடம் பெறும். காலை நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் கலந்து கொள்வார்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் 3 மணிக்கு ஆரம்பமாகும். திருமதி மிதிலா விவேகானந்தன், எம். வர்ணகுலசிங்கம், பொன். சுந்தரலிங்கம் ஆகியோரின் பாட்டும் கலாவிநோதன் எஸ். கணபதிப்பிள்ளை குழுவினரின் "சத்குரு ஸ்ரீ தியாகராஜர்" வில்லிசையும் நடைபெறும். (த-111)

## கச்சியப்பர் குருபூசை

யாழ்ப்பாணம், பெப். 19

கச்சியப்ப சிவாசாரியார் குருபூசையும் திருவிளங்க தேசிகர் நினைவுப் பேருரையும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் யாழ் இந்து மைதானச் சந்திக்கு அருகில் உள்ள மெய்கண்ட தேவர் ஆதீனத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் குருபூசை, அவரது சிலை அமைந்துள்ள யாழ். அரசடி வீதி 90ஆம் இலக்கத்தில் நாளை காலை 8 மணி முதல் நடைபெறும்.

இச்சிலையை அமைத்த டாக்டர் நா. கனகரத்தினம் தலைமையில் நடைபெற உள்ள குருபூசையில் உரைகளும் முருகன் பாடல் இசைப் பிரார்த்தனையும் இடம் பெறும். (அ)

## இணையப் பிரதிநிதிகள் கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 19

கொழும்பு சென்றுள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் அங்கு அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் அரச உயர் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் ஆகியோருடனும் —

ஜேர்மன் அரசு வழங்கிய உதவியில் அகதி முகாம் திருத்த வேலைகளுக்கு கட்டடப் பொருள்கள் எடுத்து வருவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடனும் — பேச்சுக்கள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## கல்முனை பகுதியில் மீனவர் மீது சூடு

யாழ்ப்பாணம், பெப். 19

பூநகரி — கல்முனை கடற் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடந்த புதன் பகல் 11 15 மணியளவில் அப் பகுதிக்கு வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களையும் கைவிட்டுவிட்டு கரைக்குத் திரும்பினர். (ஒ-17)

## கடத்தப்பட்ட மீனவரில் ஒருவர் விடுதலை

கொழும்பு, பெப். 19

மன்னார், புதுக்குடியிருப்புக் கிராமத்தில் இருந்து அண்மையில் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்ட இரு மீனவர்களில் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-6)

## அரசசேவைக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, பெப். 19

அரசாங்க சேவைக்கு விரைவில் ஆயிரத்து 298 எழுதுவினைஞர்கள் மற்றும் உயர் உத்தியோகத்தர்கள் அடங்கிய மற்றுமொரு தொகுதியினர் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விடுத்துள்ளார்.

இலங்கை வானொலி இத் தகவலை தெரிவித்தது.

1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பகிரங்கப் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் புதிய அரச ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா எடுத்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள 369 வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்றும்—

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்க்க கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பகிரங்க மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் பெறு பேறுகளைப் பொறுத்தே அந்த நியமனங்கள் வழங்கப்படும் எனவும் இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது. (ஓ-5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 19

வலிகாமம் கிழக்கு வலயத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களை அதில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (த-5)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 19

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூரில் நடைபெறும்-

அனைத்து வானொலிக் கலைஞர்களையும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## 'சுதர்ஸனம்' மரம் வளர்ப்பு நிர்மாணிக்கு கௌரவம்

வல்லைவெளி 'சுதர்ஸனம்' மரம் வளர்ப்புத் திட்ட நிர்மாணி திரு. மா. கனகராசாவுக்கு 'இயற்கைநேசன்' சிறப்புப் பட்டம் வழங்குவதை ஒட்டிய மாபெரும் போட்டி நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வும் நாளை ஞாயிறு காலை 9-00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் வடமராட்சி செயலக நிர்வாக பொறுப்பாளர் திரு. யாரி மகன் தலைமையில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் விஞ்ஞான வினாடி வினா போட்டி, நாவன்மைப் போட்டி ஆகியவை இடம்பெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் சுன்னாகம் முத்தமிழ் மன்ற நூலக தலைவர் திரு. சு. ஸ்ரீகுமரன் தலைமையில் 3 மணிக்கு ஆரம்பமாகும். பிற்பகல் நிகழ்ச்சிகளில் புகைப்படக் கண்காட்சி, பரிசளிப்பு விழா, பட்டமளிப்பும் கௌரவிப்பும், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெறும்.

கலை நிகழ்ச்சிகளில் பல்குரல்— பல்சுவை— நகைச்சுவை, நாடகம், வில்லிசை ஆகியவை இடம்பெறும். (த-க)

## இறக்குமதி தீர்வை நீக்கம்

கொழும்பு, பெப். 19

நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் மீதான இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் மீதான இறக்குமதித் தீர்வையும் அகற்றப்பட்டது தெரிந்ததே. (ஒ-எ)

# சமாதானம் காண நாம் அனைவரும் பாடுபட்டு உழைக்க வேண்டும்

## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் ஆயர் கெனத்

"கடலில் அமிழும் மக்கள் ஒரு வைக்கோலையும் துணைக்குப் பிடிப்பார்கள். நான் அத்தகைய வைக்கோல் ஆனேன். சமாதானம் எப்பொழுது வரும் என்று மக்கள் என்னைக் கேட்கிறார்கள். சமாதானத்துக்கான பாதை நீண்டதும் கடினமானதும் ஆகும். நாம் அனைவரும் சமாதானத்தைக் காண பாடுபட்டு உழைக்க வேண்டும்".

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 1994 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பேராயர் அதிவண. கெனத் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

பரிசளிப்பு விழா கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு ஜி ராஜநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பேராயர் கெனத் பெர்னாண்டோ மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கடவுள் முழு மனித குலத்தையும் சமமானவர்களாகப் படைத்தார். ஆகவே மனிதர் அனைவருக்கும் சமமான உரிமைகள் இருக்க வேண்டும். சொந்த மொழியைப் பேசவும் பாவிக்கவும் மக்களுக்கு உரிமை வேண்டும். சகல மக்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அரசு இந்த சுதந்திரத்தை உத்தரவாதம் செய்ய வேண்டும்" என்றார்.

அதிபர் தமது [illegible] வருமாறு குறிப்பிட்டார்.

"யாழ்ப்பாண இளைஞர்கள், ஆண்களும், பெண்களும் உணர்ச்சி ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் வசக்கமிழக்கும் மோசமான நிலைமையில் வாழ்கின்றார்கள். விமானத் தாக்குதல், ஷெல் குண்டு வீச்சு, எரிபொருள் இன்மை, போக்குவரத்து வசதிகள் இன்மை, பொழுதுபோக்கு இன்மை, மாணவருடைய ஆளுமை வளர்ச்சிக்கான வசதிகள் இன்மை இவற்றால் பள்ளி மாணவர்கள் பயங்கர அனுபவங்களுக்கூடாகச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில்தான் எமது மாணவர்கள் மேற் குறிப்பிட்ட வசதிகள் அனைத்தும் உள்ளவர்களுடன் [illegible] கலந்து கொள்கிறார்கள்.

மேலும் அறிக்கை கூறியதாவது:

யாழ்ப்பாணம் ஒரு கஷ்டப் பிரதேசம் என்று ஒருபோதும் பிரகடனம் செய்யப்படவில்லை. பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு தரப்படுத்தல் இன்னும் ஒரு வழி நடத்தும் கோட்பாடாக இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற முடியாதவர்களாக நாம் இருக்கிறோம்."

ஆயர் கெனத் பெர்னாண்டோவின் பாரியார் திருமதி சித்ரா பெர்னாண்டோ பரிசுகளை வழங்கினார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-161)

## இரவில் சூடு மிதித்து நெல் திருடும் ஆசாமிகள்!

### செம்மணி வயலில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 19

எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் நெல் விளைவித்து, அறுவடை செய்யும் தறுவாயில், நெல் பறிபோய் விட்டது!

அருவிவெட்டி, சூடடிப்பதற்காக போராகக் குவிக்கப் பட்டிருந்த சமயம், இரவில் வயலுக்குள் பிரவேசித்த திருட்டு ஆசாமிகள் இரவிரவாக சூடு மிதித்து வைக்கோலை மட்டும் விட்டுவிட்டு நெல்லை அபகரித்துக் சென்றுள்ளனர்!

அண்மையில் செம்மணிப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

வயல் சொந்தக்காரர் சாக்குகளுடன் சூடடிப்பதற்குச் சென்ற சமயம், வெறும் வைக்கோலை மட்டும் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

சுமார் 15 மூடைகள் வரையான நெல்லை திருடர்கள் இவ்வாறு அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது.

அரியாலைப் பகுதியிலும் மற்றும் சில இடங்களிலும் இவ்வாறான துணிகரத் திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில நாட்களில் நிகழ்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-17)

## நகை அடகு வைப்பதற்கு மக்கள் வங்கி புதிய திட்டம்

### அகால மரணமானால் உறவினர் மீட்கலாம்

கொழும்பு, பெப். 19

மக்கள் வங்கி நகை அடகு வைக்கும் நடைமுறையில் புதிய திட்டம் ஒன்றை அடுத்த வாரம் முதல் அறிமுகப்படுத்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் படி, நகை அடகு வைத்தவர்கள் அகால மரணமடைந்தால் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் அவர்களின் நகைகளை மீட்டுக் கொள்ள முடியும்.

கொழும்பு நகர் எல்லைக்குள் நகைகளை அடகு வைப்பதற்கான உச்ச வரம்புத் தொகை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகவும் —

ஏனைய பகுதிகளில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## சித்த மருத்துவ மாணவர் வாரம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவ மாணவர்களின் மாணவர் வாரம் இன்று ஆரம்பமாகிறது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரினால் பிரகடனம் செய்யப்பட்ட இம் மாணவர் வாரம் இன்று முதல் 25 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படும்.

சிரமதான வேலைகள், அகதிகள் முகாம்களுக்குச் சென்று உதவுதல் போன்ற செயற்பாடுகளில் சித்த மாணவர்கள் இவ்வாரத்தில் பங்கு பற்றுவர். (த-3)

## இன்று

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவினருக்கான சுகாதாரக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விவேகானந்தர் நினைவுப் பேச்சுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

இலங்கை திட்டமிடலாளர் சங்கத்தின் யாழ் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட "அரசும் அபிவிருத்தியும் சந்தையும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இதில் யாழ் பல்கலைக் கழக பொருளியல் துறை பேராசிரியர் திரு நா பாலகிருஷ்ணன் கருத்துரை வழங்குவார். (த-162)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப் 19

யாழ் இலக்கிய வட்டத்தின் "அக்கரை இலக்கியம்" என்ற பொருளில் கலந்துரையாடல் ஒன்று, இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும்.

யாழ். இலக்கிய வட்ட தலைவர் து. வைத்திலிங்கம் தலைமை வகிப்பார். அக்கரை இலக்கியம் என்னும் பொருளில் கலந்துரையாடலை என் சுப்பிரமணிய ஐயர் நடத்துவார். (ஒ)

## ராணுவ சீருடை தரித்தோர் கொள்ளை

கொழும்பு. பெப். 19

இராணுவச் சீருடையைப் போன்ற உடை தரித்த ஆயுதங்களுடன் வந்த இரு இளைஞர்கள் புத்தளம் கடவமொட்டுப் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து 8 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், பணத்தையும் கொள்ளையிட்டனர். கடந்த 13ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

கொள்ளையர்கள் வான் ஒன்றில் தப்பிச்சென்ற சமயம், முந்தல் பகுதியில் வைத்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களை கைது செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-6)

## பெப்ரவரி மாத விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளுக்கான பெப்ரவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும். (த)

## நாளை

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் முதன் முறையாக நடத்தும் மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் நாளை ஞாயிறு ஆலய மண்டபத்திலும் அருகில் உள்ள வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும் காலை 10 மணிக்கு நடைபெறும். (த)

★ ★ ★

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஜி. சி. ஈ. உயர் தர வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும். (த-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப் 19

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் மாதாந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு ஐ வைத்தியநாதர் கிரகங்களின் சுபத் தன்மை என்ற பொருளிலும், ஐயா சச்சிதானந்தம் இராகுகாலம் என்ன செய்யும்? என்ற பொருளிலும் ஆய்வுரை நிகழ்த்துவார் (ஒ)

பெய்யும் மழை நீர் பெயராதிருந்தால்
செய்யும் தொழிலும் சிறப்படையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்குமாகாணசபையில் சிங்கள அதிகாரிகளின் ஆதிக்கம்

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு – கிழக்கு மாகாண சபையில் உள்ள முக்கியமான செயலாளர் பதவிகள் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதால் அரசாங்கம் இச்செயலாளர்கள் மூலம் தான் நினைத்ததை செயற்படுத்தி வருவதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு போதிய வருமானம் இல்லை என்ற காரணத்தைக் காட்டி செயலாளர்களின் எண்ணிக்கையை அரசு ஐந்தாகக் குறைத்துள்ளது.

இந்த ஐவரில் இருவர் தமிழர். இருவர் சிங்களவர். ஒருவர் முஸ்லிம்.

ஆனால் முக்கிய பதவிகளான காணி, கல்வி அமைச்சுக்களின் செயலாளர்களாக சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதம செயலாளரும், புனர்வாழ்வுப் பிரிவு செயலாளருமே தமிழர்கள் ஆவர்.

தமிழ் மக்களுக்கு எதிரான கல்விக்கொள்கை, குடியேற்றக் கொள்கை ஆகியவற்றை மாகாண சபை மூலம் செயற்படுத்த அரசு முயற்சிப்பதையே இந்த நியமனங்கள் காட்டுகின்றன என்று நம்பப்படுகிறது. (இ-3)

# இந்தியாவில் உள்ளது போல் இங்கும் தேர்தல் ஆணைக்குழு

## சிறிமாவோ கோரிக்கை

இந்தியாவில் உள்ள சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவைப் போன்று இலங்கையிலும் உருவாக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற தேர்தல் ஆணையாளரின் புதிய அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவின் போது அவர் அனுப்பிய செய்தி வாசிக்கப்பட்டது.

அச்செய்தியிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

கட்டத்தினை ஜனாதிபதி திறந்து வைத்துப் பேசினார்.

திருமதி பண்டாரநாயக்காவின் வேண்டுகோள் குறித்து ஜனாதிபதி எக்கருத்தையும் வெளியிடவில்லை. (இ-எ)

# டில்லியில் ராவைச் சந்தித்து ஜெயலலிதா முறைப்பாடு

## ஆளுநருடனான முரண்பாடு அதிகரிப்பு

சென்னை, பெப். 19

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சுடந்த திங்கட்கிழமை இரவு புதுடில்லியில் பிரதமர் பி. வி. நரசிம்மராவை தனியே சந்திப் பேசினார்.

அப்போது, தமிழக அரசுக்கு எதிரான விரோதப்போக்கை ஆளுநர் சென்னாரெட்டி தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாக முதலமைச்சர், பிரதமரிடம் முறையிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக முதலமைச்சர் ஜெயலலிதா புதுடில்லி சென்ற போதே இச்சந்திப்பு இடம் பெற்றது.

இதேவேளை —

தமிழக அரசு கலைக்கப்படும் என்ற அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்றும் —

மத்திய அரசுக்கு அப்படிப் பட்ட எண்ணமும் இடையாது என்றும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்தார்.

இதனிடையில் —

''எனது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. நான் பேசாமல் இருக்கின்றேன் என்றால் மாநிலத்தில் நடப்பது அனைத்தும் சரி என்று நான் ஏற்றுக்கொள்கிறேன். என்ற அர்த்தமல்ல — என்று மாநில ஆளுநர் சென்னா ரெட்டி சொன்னார்.

இன்னும் சில தினங்கள் பொறுத்திருங்கள் தமிழக மக்களுக்கு என்னால் முடிந்ததைச் செய்வேன். தவறு செய்தவர்கள் தண்டனை பெற்றே ஆக வேண்டும் தப்பி விடமுடியாது — என்றும் ஆளுநர் முதலமைச்சர் ஜெயலலிதாவை குற்றஞ்சாட்டினார். (இ-எ)

## கோபி கிருஷ்ணா காலமானார்

இந்தியாவின் புகழ்பெற்ற நாட்டிய விற்பன்னர் கோபி கிருஷ்ணா காலமாகி விட்டார். (இ-எ)

இலங்கை திரும்பி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்து கொண்டார். என்று கூறப்பட்டாலும்—

அவர் கொலை செய்யப்பட்டார் என்றே பரவலாக நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

முல்லைத்தீவில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

சிறிது நேரத்தின் பின்னர் மூன்று மீனவர்களின் சடலங்கள் பூனைத்தொடுவாய் — கடற்தொடுவாய் கடற்கரையில் கரை ஒதுங்கின.

அமிர்தநாயகம் ஜோன் பெர்னாண்டோ (வயது 33), யக்கோப்பிள்ளை நிக்சன் (வயது 20), யேசுராசா சாந்தகுமார் (வயது 23) ஆகிய மூன்று மீனவர்களின் சடலங்களுமே கரை ஒதுங்கின.

சென். மேரீஸ் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரும், பூனைத்தொடுவாய் பகுதி மக்களும் இம்மீனவர்களின் சடலங்களை மீட்டு அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

அந்தோனிப்பிள்ளை யக்கோப்பிள்ளை (வயது 44), குணம் என அழைக்கப்படும் கபிரியல் யேசுதாஸ் (வயது 27), மனுவேற்பிள்ளை மரிய சீலன் (வயது 24). யேசுராசா ஜெயா (வயது 18), நிக்சன் என அழைக்கப்படும் கபிரியல் பிள்ளை அருள்சீலன் (வயது 25), ஆசீர்வாதம் வின்சேந்தி (வயது 42). பவா என அழைக்கப்படும் சுருளிவர்மன் (வயது 25) ஆகிய ஏழு மீனவர்களுமே காணாமற் போயுள்ளனர்.

இவர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டும், காணாமற் போயுமுள்ள இப்பத்து மீனவர்களும் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையால் கட்டைக்காடு, முள்ளியான் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து பூனைத்தொடுவாய், கடற்தொடுவாய் பகுதிகளில் வசித்து வந்தனர்.

இதனிடையே மீனவர்கள் சென்ற ஐந்து கட்டுமரங்களும் கடற்படையினால் சேதமாக்கப்பட்ட நிலையில் கரை ஒதுங்கின. அதில் இருந்த 2 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளும் கடற்படையினரால் [illegible] பட்டுக் கிடந்தன. (இ-எ)

# சடலங்கள் புதைக்கப்பட்ட..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

— இவ்வாறு விடுதலைப் புலிகளின் தாக்குதலின் பின் பூநகரி கோமாரர் முகாமில் தங்கியிருக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவர் 'ராவய' சிங்கள வார இதழுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பூநகரியைப் புலிகள் தாக்கி ஒரு வாரத்தின் பின் மேலதிக படையணி அங்கு சென்றது. அதில் நாமும் இருந்தோம். அன்று முதல் நாம் இங்கு அனுபவித்து வரும் வேதனைகளை — மோசமான வாழ்க்கையை — எமது மக்கள் அறியவேண்டும் என்பதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

வடக்கு — கிழக்கில் மிகக் கேவலமான முகாம் என்றால் அது பூநகரி தான்.

பூநகரித் தாக்குதலில் உயிரிழந்த இராணுவத்தினரதும் மற்றையோரினதும் சடலங்கள் —ஆயிரக்கணக்கில் — எம்மைச் சுற்றிப் புதைந்து கிடக்கின்றன. அவற்றுக்கு மத்தியில் சேவையாற்றுவதை எமது நாட்டுக்காகப் பொறுத்துக் கொள்வோம்.

ஆனால் இங்கு கடமையாற்றும் எமக்கு சாதாரண மக்களுக்கும் கிடைக்கும் வசதிகள் கூட கிடைக்கவில்லை. கிடைக்கும் பொருள்களைப் பார்க்கும் போது வேதனைதான் மிஞ்சுகிறது.

10 பேருக்கு 2 சவர்க்காரம், ஐந்து அல்லது ஆறு பேருக்கு ஒரு பற்பசை, பிளட்டூன் ஒன்றுக்கு (30 பேருக்கு) மூன்று உள்ளாடைகள் ('பெண்டர்கள்') 110 பேருக்கு 3 பெற்சீற் என்ற விதத்திலேயே வழங்கப்பட்டிருக்கிறது.

### 20 லொறிகள் எங்கே?

ஆனால் வடக்குப் படையினருக்கு பொருள்களுடன் 20 லொறிகள் வவுனியா நோக்கி வருவதாக வானொலியில் கேட்டோம். மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் அவை வந்து சேரவில்லை.

அந்த லொறிகளில் நுளம்பு வலைகளும், சைக்கிள்களும் இருப்பதாகக் கூறப்பட்டது. நுளம்பு வலைகளில் 2 மணி நேரமாவது தொல்லையின்றி படுத்திருந்து அனுபவிக்க ஆவலுடன் காத்திருக்கிறோம். ஆனால் அவை வந்து சேரவில்லை.

அந்த லொறிகளுக்கு இன்னும் நான்கு சில்லுகளும் பொருத்தப்படவில்லையா? வவுனியா வரை அந்த லொறிகளைத் தள்ளிக்கொண்டு வந்திருந்தால் கூட அந்தப் பொருள்கள் இப்போது இங்கு வந்து சேர்ந்திருக்குமே!

வானொலியில் பொய் சொல்வது ஏன்? உயரதிகாரிகளின் பிள்ளைகள் சைக்கிள் ஓடுகிறார்கள். அதிகாரிகளின் வீட்டு வேலைக்காரர்கள் கூட நுளம்பு வலையில் தூங்குகின்றனர்.

எமது பெயரை உயரதிகாரிகள் விற்றுக் கொண்டிருப்பது தான் எமக்கு வேதனையைத் தருகிறது. — இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-6)

கொள்ளைக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூலான்தேவி மீது சுமத்தப்பட்டிருந்தன.

ஏனைய மாநில அரசுகளும் இவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்குகளை வாபஸ் வாங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பூலான் தேவி 1991 இல் நடந்த இந்தியப் பொதுத் தேர்தலில் சிறையில் இருந்தவாறே போட்டியிட்டார் என்பதும் —

இவரை மையமாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் ஒன்று இந்தியாவில் இருந்து உலகத் திரைப்பட விழாவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (இ-எ)

கடற்படை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் காயமடைந்தார்.

இன்பருட்டியைச் சேர்ந்த திருமதி. பாலசிங்கம் பாக்கியம் (வயது 50) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயம் அடைந்தவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-178)

# யாழ்ப்பாண மாம்பழம் குறித்து சபையில் அஸ்வர்

யாழ்ப்பாணம், பெப். 19

முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லெண்ணத்தின் அறிகுறியாக ஆண்டுதோறும் ஆந்திராவில் இருந்து இரு கூடை நிரம்பிய மாம்பழங்களை ரஷ்யாவுக்கு அனுப்பி வந்தார்.

அதே போன்று யாழ்ப்பாண கறுத்தக் கொழும்பான் மாம்பழம் மூலம் நாம் சமாதானத்தைத் தேடினால் என்ன?

முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மொனராகலையில் பழங்களைப் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் யாழ்ப்பாண கறுத்தக் கொழும்பான் மாம்பழம் பற்றி பிரஸ்தாபித்தார்.

''யாழ்ப்பாணம் எமது நாட்டிலேயே உள்ளது. அது இன்னமும் நாட்டிலிருந்து பிரியவில்லை. ஒருபோதும் அதனைப் பிரிய விடமாட்டோம்.

யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களும் எமது மக்களே. யாழ்ப்பாணத்தில் சிறந்த ரக மாம்பழம், வாழைப்பழம் ஆகியவை உள்ளன. அவற்றைச் சுவைக்கும் வாய்ப்பு முன்னர் இருந்தது. இப் போது அந்த வாய்ப்புக் குறைந்து விட்டது.

அந்த வாய்ப்பை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணப் பழங்கள் மூலம் இந்நாட்டு மக்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

## வீதி திருத்த வேலை ஆரம்பம்

குருநகர், பெப். 19

யாழ். நகரப் பகுதியில் பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் இருந்துவரும் வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன.

அதிகபோக்குவரவுப் பாதையாகப் பயன்படும் கே. கே. எஸ். வீதி தற்பொழுது திருத்தப்பட்டு வருகிறது. யாழ். நகரில் இருந்து நாச்சிமார் கோயிலடி வரையில் இதுவரை வீதி திருத்தப்பட்டிருக்கிறது. (ஒ-51)

# மரண அறிவித்தல்கள்

## அப்புக்குட்டி செல்லர்

K. K. S. வீதி கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த அப்புக்குட்டி செல்லர் நேற்று (18-2-94) காலமாகி விட்டார்.

அன்னார் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், பூமணி, சின்னமணி, இராசமணி, காலம் சென்ற கந்தசாமி, சிவபாதம் (கட்டட ஒப்பந்தக்காரர்), சற்குணம் (உரிமையாளர் கதிரமலை ஆனந்தன்) வீரசிங்கம் (கிஸ்ணா தச்சுத் தொழிலகம்), பொன்ராசா (ஜேர்மனி) மனோன்மணி, ஆனந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள்

கோண்டாவில் மேற்கு. (29526)

## சின்னப்பு பரஞ்சோதி

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சின்னப்பு பரஞ்சோதி 18-02-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி க. மங்கையர்க்கரசி, சிவசுப்பிரமணியம், கந்தசாமி, திருமதி இ. மனோன்மணி, செல்லரெட்ணம், குணசீலன், திருமதி வி. மகேஸ்வரி குணசீஸ்வரராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகம், பூமணி, அழகம்மா, சிவநாதன், மகேஸ்வரி, இந்திராணி, விஜயரட்ணம், யோகமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19-02-94 இல் அன்னாரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
ப. கந்தசாமி (மகன்)

'பரமவாசா'
V. C. ஒழுங்கை,
கோப்பாய். (29529)

## யோக்கிம் பிள்ளை

14 ஆம் திகதி உதயனில் வெளிவந்த போல் மாமா என்றழைக்கப்படும் யோக்கிம் பிள்ளையின் பூதவுடல் 17 ஆம் திகதி பிற்பகல் நல்லடக்கம் செய்யப்பட்டது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் இதனைப் பத்திரிகையில் அறியத்தர முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

தகவல்
அன்ரன் கமிலெஸ்
(மகன்)

425 நாவலர் வீதி
யாழ்ப்பாணம். (29530)

## திருமதி குமாரவேலுப்பிள்ளை சிவக்கொழுந்து

காரைநகர் முக்கம்பிட்டி கோவளத்தை பிறப்பிடமாகவும், சுன்னாகத்தில் வசித்தவருமாகிய சிவக்கொழுந்து நேற்றிரவு மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் E. M. சண்முகம், E. M. பொன்னம்பலம் (E. M. P.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் —

நமசிவாயம் (கொழும்பு), பாக்கியம், தனலட்சுமி, குலசிங்கம், சரஸ்வதி, கனகசபாபதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, இராமுப்பிள்ளை, காலஞ்சென்ற மார்க்கண்டு, மற்றும் நாகேஸ்வரி, சிவலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குலசிங்கம், பெரிய மதவடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் விலாசத்தில் இன்று (19-02-1994) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குலசிங்கம்
(மகன்)

பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (29531)


## கணக்காளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு ஆண் கணக்காளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

612, C/O உதயன்.

(29494)

## தேவை

ரீ-ரச்சிங் (RE-TOUCHING) பினிசிங் (FINISHING) வேலை தெரிந்தவர்கள் புதன் கிழமை (23-02-94) காலை 10-00 மணிக்கு நேரில் வரவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

சித்ராலயா
18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7247)

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

HY-LINE BROWN (கைலைன் பிறவுண்), HY-LINE WHITE (கைலைன் வெள்ளை) பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 999 வெளிநாட்டு மீன்தூள் உடன் விற்பனைக்குண்டு. 21-02-1994 அன்று கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

"மல்லிகாபதி",
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

[29524]

பரிசளிப்பு விழாவை முன்னிட்டு...

## மாபெரும் புகைப்பட கண்காட்சி

கலைஞர் திரு. தி. தவபாலன்
அவர்களின்
சிந்தனையில் தட்டிய உயிரோவியங்கள்

யா/வடஇந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை
பிற்பகல் மாலை 3மணி (ஞாயிறு)

✱ அனுமதி இலவசம்

முத்தமிழ் மன்ற நூலக நிர்வாகிகள்,
சுன்னாகம்

அன்பளிப்பு:
வீனஸ் வர்த்தகக் களஞ்சியம்
யாழ்ப்பாணம்.

[சி-7255]

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய
நிதி உதவிக்காக
யாழ்ப்பாணம் - நீராவியடி கலைக்கல்லூரி
வழங்கும்.

புலவர் மூத்து இராசரத்தினத்தின்

## இலங்கை வேந்தன்

இசை நடன நாடகம்

இடம்: கைலாசபதி கலையரங்கு
காலம்: 20-02-1994 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.30 மணி.

அன்பளிப்பு: ரூபா 100/- 50/- 20/-

காலை 9.30 மணி காட்சி நடைபெறமாட்டாது. மாலை காட்சிக்கு சகல அனுமதிச்சீட்டுகளும் செல்லுபடியாகும்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்
யாழ் பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:
சீமாட்டி ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(29509)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### சிவநெறிச் செம்மல் ச. நமசிவாயம்

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்க முன்னாள் தலைவராகவும், சமய, சமூகசேவையில் அரும்பெரும் பணியாற்றியவருமான அமரர் ச. நமசிவாயம் அவர்களின் 45 ஆம் நாள் நினைவு தினமான இன்று அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். வர்த்தகர் சங்கம்

(6929)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 228/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org